**கவனிக்க**.- *2020.08.21 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி* II *மற்றும் பகுதி* IV*(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2191 - 2020 අගෝස්තු මස 28 වැනි සිකුරාදා - 2020.08.28

*2191 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)



| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |

| | பக்கம் |
|---|---|
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 146 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 148 |



**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2020, செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

*இணைப்பு 9*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது உறுப்புரையின் (4) ஆவது உப உறுப்புரையின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப் பத்திரத்தினை இரத்துச் செய்தல் (104 ஆம் உறுப்புரை) தொடர்பான அறிவித்தல்

*வடமத்திய மாகாண சபையின் அநுராதபுர மாவட்டத்தின் ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர்/பிரதி காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையில்) பீ. ஜீ. சுனில் அபேகோன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் உறுப்புரையின் 4 ஆம் உப உறுப்புரையின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1997.09.04 ஆந் திகதி அளிக்கப்பட்ட அநு/ராஜா/பிர/4189 ஆம் இலக்கமுடைய அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளராகிய ராஜாங்கனை, தெற்கு கரை, யாய 10 இல் வசிக்கும் பஹலகே ரோமானிஸ் இற்கு அளிக்கப்பட்ட அநுராதபுர மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 1078 ஆம் இலக்கத்தின் கீழ் 1998.02.06 ஆந் திகதிய 289/153 ஆம் பக்கத்தில் பதிவுசெய்யப்பட்ட கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட காணிக்கு பங்குதாரராகுவதற்கு சட்ட ரீதியாக உரித்துடையவர் யாரும் இல்லாத காரணத்தால் அல்லது உரித்துடைய ஆள் ஒருவர் இருந்தும் அவர் பங்குதாரராகுவதற்கு விருப்பமின்மையாலும் பங்குதாரராகுவதற்கு ஆள் எவரும் இல்லை என அறிக்கையிட்டுள்ளதால் அவ்வளிப்புப் பத்திரத்தை மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 104 ஆம் உறுப்புரையின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என இத்தால் அறிவித்துக்கொள்கிறேன். இது பற்றி யாதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அது தொடர்பில் 2020.09.21 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்கவும்.*

**அட்டவணை**

*அநுராதபுர நிருவாக மாவட்டத்தின் ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவில் தெற்கு விலச்சி பத்துவ/கோரலயில் 452 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் யாய 10 எனும் பெயருடைய ஊரில் அமையப்பெற்றுள்ள அளவில் 2 ஏக்கர் 2 றூட் 0 பேர்ச் விசாலமான பின்வருமாறு எல்லைகளைக் கொண்ட அரச காணி (மேட்டு) :*

*வடக்கு : 23 ஆம் இலக்க வீதி ;*
*கிழக்கு : பியதாச ஜயலத்தின் காணி (280 இன் ஒரு பகுதி) ;*
*தெற்கு : உப கால்வாய் ;*
*மேற்கு : இலக்கம் 281 1/2 (ஆர். கே. குணவதியின் காணி), இலக்கம் 281 1/2 (எஸ். எச். தயாவதியின் காணி).*

*பீ. ஜீ. சுனில் அபேகோன்,*
*பிரதேச செயலாளர்/காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையில்),*
*ராஜாங்கனை.*

*பிரதேச செயலகம்,*
*ராஜாங்கனை,*
*2020, சனவரி 27.*

*08-678/1*

---

*இணைப்பு 9*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தினை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் பீ. ஜீ. சுனில் அபேகோன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் உப பிரிவு 19(4) இன்கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 2000.12.20 ஆந் திகதி அளிக்கப்பட்ட இலக்கம் அநு/ராஜா/பி/5275 இன் சொந்தக்காரரான ராஜாங்கனை தெற்கு, வட்டார இலக்கம் 11 இல் வசிக்கும் கடவக கங்காணம்கே குணரத்ன என்பவருக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதும் அநுராதபுர மாவட்டக் காணிப் பதிவாளர் அலுவலகத்தில் 125 ஆம் இலக்கத்தின் கீழ் பக்கம் 700/ 32 இல் 2009.02.20 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ளதுமான கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டுக்கு சட்ட ரீதியான பின்னுரித்தாளராக ஒருவரை நியமிக்கப்பட்டிருக்காமை அல்லது உரிமைக்காரர் ஒருவர் உள்ளபோதும் அவர் பின்னுரித்தாளராக நியமிக்கப்பட விருப்பமின்மை காரணமாக பின்னுரித்துக்காரர் ஒருவர் நியமிக்கப்படாதுள்ள போது குறித்த அளிப்பினை மேற்சொன்ன சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதை இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பில் யாதேனும் எதிர்வு கூறல் இருப்பின் அதுபற்றி 2020.09.21 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அதனை அறியத்தரவும்.*

**அட்டவணை**

அநுராதபுரம் மாவட்டத்தில் ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவில் விலச்சிய தெற்கு பத்துவ/கோரளை, 453 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் உள்ள ராஜாங்கனை வட்டார இலக்கம் 11 எனும் கிராமத்தில் அமைந்துள்ளதுமான நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இ. கு. வ. இலக்கம் 16 உடைய துண்டு பிரிக்கும் வரைபடத்தில் (0ஏ. 2றூ. 0பே ப.) பரப்பளவுள்ளதும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணித்துண்டு (மேட்டு நிலம்) :

வடக்கு : துண்டு இலக்கம் 558 மற்றும் பாதை ஒதுக்கம் ;
கிழக்கு : ரூப்பரத்னவின் மேட்டுக் காணி ;
தெற்கு : தர்மசேனவின் மேட்டுக் காணி ;
மேற்கு : சந்திரசேனவின் மேட்டுக் காணி.

பீ. ஜீ. சுனில் அபேகோன்,
பிரதேச செயலாளர்,
ராஜாங்கனை.

பிரதேச செயலகம்,
ராஜாங்கனை,
2020, மார்ச்சு 06.

08-678/2

---

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தினை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வட மத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர்/உதவி காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையிலான) பீ. ஜீ. சுனில் அபேகோன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் உப பிரிவு 19(4) இன்கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1992.01.27 ஆந் திகதி அளிக்கப்பட்ட இலக்கம் அனு/ராஜா/116 இன் உரிமையாளரான ராஜாங்கனை தெற்கு, வட்டார இலக்கம் 5 இல் வசிக்கும் வீரப்புலிகே பீட்டர் பிரனாந்து என்பவருக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதும் அநுராதபுரம் மாவட்டக் காணிப் பதிவாளர் அலுவலகத்தில் 3043 ஆம் இலக்கத்தின் கீழ் 346/82 ஆம் பக்கத்தில் 1999.07.07 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளதுமான கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டுக்கு சட்ட ரீதியான பின்னுரித்தாளராக ஒருவரை நியமிக்கப்பட்டிருக்காமை அல்லது உரிமைக்காரர் ஒருவர் உள்ள போதும் அவர் பின்னுரித்தாளராக நியமிக்கப்பட விருப்பமின்மை காரணமாக பின்னுரித்துக்காரர் ஒருவர் நியமிக்கப்படாதுள்ள போது குறித்த அளிப்பினை மேற்சொன்ன சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதை இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பில் யாதேனும் எதிர்வு கூறல் இருப்பின் அதுபற்றி 2020.09.21 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அதனை அறியத்தரவும்.

**அட்டவணை**

வட மத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டத்தில் ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவில் எப்பாவல கோரளே, 447 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் உள்ள றன்தெனிகம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் தலைமை அதிபதி அவர்களால் தயாரிக்கப்பட்டு அவர் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதுமான 03 ஆம் இலக்க களத்தாளில் 429 ஆம் இலக்க இ. கி. வ. துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 237 ஆம் இலக்க காணித்துண்டு எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுமான (1ஏ. 3றூ. 17பே.) பரப்பளவுள்ளதும் மேட்டுக் காணி என அழைக்கப்படும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணித்துண்டு :

வடக்கு : இலக்கம் 255 இல் காட்டப்பட்டுள்ள கழிவுநீர் வாய்க்கால் ஒதுக்கம் ;
கிழக்கு : இலக்கம் 238 வயற் காணித்துண்டு ;
தெற்கு : 249 சிறுவாய்க்கால் ஒதுக்கம் ;
மேற்கு : இலக்கம் 236 இல் காட்டப்பட்டுள்ள வயற் காணித்துண்டு.

பீ. ஜீ. சுனில் அபேகோன்,
பிரதேச செயலாளர்,
ராஜாங்கனை.

பிரதேச செயலகம்,
ராஜாங்கனை,
2020, பெப்புருவரி 03.

08-678/3

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தினை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர்/உதவிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையிலான) பிஹிலிஎலே கெதர சுனில் அபேகோன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் உப பிரிவு 19(4) இன்கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1995.08.21 ஆந் திகதி அளிக்கப்பட்ட இலக்கம் அநு/ராஜா/பி/931 இன் உரிமையாளரான ராஜாங்கனை, வட்டார இலக்கம் 11 இல் வசிக்கும் வெலிவிட்டகே பிரேமதாச என்பவருக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதும் அநுராதபுரம் மாவட்டக் காணிப் பதிவாளர் அலுவலகத்தில் 3196 ஆம் இலக்கத்தின் கீழ் 65/196 ஆம் பக்கத்தில் 1995.11.08 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ளதுமான கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டுக்கு சட்ட ரீதியான பின்னுரித்தாளராக ஒருவரை நியமிக்கப்பட்டிருக்காமை அல்லது உரிமைக்காரர் ஒருவர் உள்ளபோதும் அவர் பின்னுரித்தாளராக நியமிக்கப்பட விருப்பமின்மை காரணமாக பின்னுரித்துக்காரர் ஒருவர் நியமிக்கப்படாதுள்ள போது குறித்த அளிப்பினை மேற்சொன்ன சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதை இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பில் யாதேனும் எதிர்வு கூறல் இருப்பின் அதுபற்றி 2020.09.21 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அதனை அறியத்தரவும்.

### அட்டவணை

அநுராதபுரம் மாவட்டத்தில் ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவில் நுவரகம்பளாத்த பத்துவே/கோரளே, 453 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் உள்ள வட்டார இலக்கம் 11 எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் தலைமை அதிபதி அவர்களால் தயாரிக்கப்பட்டு அவர் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதுமான 01 ஆம் இலக்க களத்தாளில் 16 ஆம் இலக்க இ. கொ. வ. துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 369 ஆம் இலக்க காணித்துண்டு எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுமான (0ஏ. 2றூ. 0பே.) பரப்பளவுள்ளதும் மேட்டுக் காணி என அழைக்கப்படும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணித்துண்டு :

வடக்கு : பாதை ஒதுக்கம் ;
கிழக்கு : மேட்டுக் காணி இலக்கம் 368 ;
தெற்கு : காணி இலக்கம் 392 மற்றும் 253 ;
மேற்கு : மேட்டுக்காணி இலக்கம் 370.

பீ. ஜீ. சுனில் அபேகோன்,
பிரதேச செயலாளர்/காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையில்),
ராஜாங்கனை.

பிரதேச செயலகம்,
ராஜாங்கனை,
2020, சனவரி 13.

08-678/4

---

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.:- 4/10/59804.
பிரதிக் காணி ஆணையாளரின்
இல. :- EP/28/LB/LS/Tri/Kuc/80.

### முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

திருகோணமலை மாவட்டம், குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட செந்தூர் கிராம அலுவலர் பிரிவில் செந்தூர் கிராமத்தில் அமைந்துள்ளதும் PLC/EP/28/SUR/2016/27 பூர்வாங்க படத்தில் காணித்துண்டு இலக்கம் A எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 08 ஏக்கர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை விவசாய நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தறுமாறு கேட்டு திரு. சேனாநாயக அப்புஹாமிலாகே டொன் ஆனந்த என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : பிரதான வீதி மற்றும் பாதை ;

கிழக்கு : பிரதான வீதி ;

தெற்கு : அரச காணி ;

மேற்கு : காணித்துண்டு இலக்கம் B.

*03.* குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (2020.02.04 தொடக்கம்) ;

**வருடாந்தக் குத்தகை.**- வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட சந்தைப் பெறுமதியில் 2% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும். குறித்த வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) அதிமாக உள்ள சந்தர்ப்பங்களில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் 4% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும். இக் குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படும். ஆயினும், திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருடங்களில் இறுதியில் கொடுபட்ட வருடாந்த குத்தகை பணத்திற்கு 20% கூட்டி கொள்ளுதல் வேண்டும்.

*தவணைப்பணம்.*- இல்லை.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது.

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்.

(உ) கட்டப்பட்டுள்ள/கட்டப்படவிருக்கும் கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்.

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(எ) குத்தகை ஆரம்பித்த 2020.02.04 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்களாகிலும் முடியும் வரை கீழ்க்குத்தகை அனுமதிக்கப்படமாட்டாது.

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

*04.* இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரித்த தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

எம். எல். ஏ. சஞ்ஜீவ,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2020, யூலை 28.

08-625

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/22087(XVI).
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : சிபி/எல்சி/எல்டி/4/1/4/634.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கண்டி மாவட்டம், குண்டசாலை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 691, குண்டசாலை வடக்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த குண்டசாலை எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் பிபி மஹ 5253 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 12 எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 0.0521 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வதிவிட நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தறுமாறு கேட்டு திரு. பமுனேன்திர முதியன்சேலாகே பொல்வதுரேகெதர பாலித விஜய பண்டார என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

*02.* விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : காணித்துண்டு இல. 11 மற்றும் பிபி மஹ 5253 இல் காணித்துண்டு இல. 08 ;
கிழக்கு : பிபி மஹ 5253 இல் காணித்துண்டு இல. 08 ;
தெற்கு : காணித்துண்டு இல. 19 ;
மேற்கு : காணித்துண்டு இல. 13.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2020.06.17 ஆந் திகதியிலிருந்து முப்பது வருடங்கள் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை**.- பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டிற்கமைய 1994 ஆம் வருடத்திற்கான காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்.

*தவணைப்பணம்*.- வருடாந்தக் குத்தகையின் மும்மடங்கு தொகை தவணைப் பணமாக செலுத்தப்படல் வேண்டும்.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின்/ மாகாண காணி ஆணையாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வதிவிட நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது.

(ஈ) பிரதேச செயலாளர், மாகாண காணி ஆணையாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்.

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்.

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(எ) 2020.06.17 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்கள் முடியும் வரையிலும் இக்காணியை குத்தகைக்குப் பெற்றுக்கொண்டுள்ள காரணத்தைப் பூர்த்திசெய்யும் நோக்குடன் குடும்பத்துடன் மாத்திரம் கீழ்க் குத்தகை அல்லது கைமாற்றம் அனுமதிக்கப்படும்.

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரித்த தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

டி. எம். யூ. பி. கே. உடகெதர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2020, ஓகத்து 28.

08-677

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.